மாதிரி (இலக்கம் 02)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා - 487

ආයතනයේ නම - රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍ය වරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 487

நிறுவனத்தின் பெயர் - பகிரங்க சேவை ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களையும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No - 487

Name of the institution - Public Service Commission

Submission of observations of the Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

மாதிரி (இலக்கம் 01)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 487

நிறுவனத்தின் பெயர் - பகிரங்க சேவை ஆணைக்குழு

	குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்	சீர் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
01	<u>பகிரங்க சேவை ஆணைக்குழுவின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள்</u> பகிரங்க சேவை ஆணைக்குழுவின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கைகள் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கப்படாமை தொடர்பில் குழுவினால் அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த வருடாந்த அறிக்கைகளை பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கத் தவறியுள்ளதாகவும் அவற்றைப் பதிவேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.உ.) தெரிவித்தார்.	2024 ஆம் ஆண்டு வரை செயலாற்றுகை அறிக்கைகள் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
02	<u>2021 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் அவதானிப்புக்களுக்கு அமைய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை மூலம் ஆணைக்குழுவின் செயலாற்றுகையை அளவிடுவதற்குப் போதிய விடயங்கள் முன்வைக்கப்படாமை</u> (i) ஆணைக்குழுவின் தாபனப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு, நியமனப் பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவு மூலம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின்	(i) 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிக்கையில் நிலையியற் கட்டளை இலக்கம் 42 இற்கு அமைய

		எண்ணிக்கை மாத்திரம் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வு வருடத்தில் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் (பணிகள்) எண்ணிக்கை, குறித்த முறைப்பாடுகளுள் முடிவுறுத்தப்பட்ட எண்ணிக்கை மற்றும் மேலும் எஞ்சியுள்ள எண்ணிக்கை போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய ஏற்புடைய அறிக்கையில் 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மட்டத்தைக் கவனத்திற் கொள்ளும் அளவிற்குப் போதிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2022 செயலாற்றுகை அறிக்கையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குழுவின் முன்னிலையில் வெளிப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதத்திலிருந்து சமர்ப்பிக்கப்படும் செயலாற்றுகை அறிக்கைகளில் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பிலான தகவல்களை வெவ்வேறாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பி.க.உ. தெரிவித்தார்.	குறித்த தகவல்களும் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையானது வரைவுப் பணிக்காக கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது.
		(ii) மீளாய்வாண்டில் மேன்முறையீட்டுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை பொருண்மை சார் ரீதியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் அறிக்கைகள் கோரப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையை முன்வைக்கையில் அது மீளாய்வாண்டின் மற்றும் முந்தைய ஆண்டுகளின் மேன்முறையீடுகளின்	(ii) ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் பொருட்டு ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளை வழங்கத் தாமதப்படுத்தியுள்ள நிறுவனங்கள் (அமைச்சுக்கள்/திணைக்களங்கள் முதலான ஏனைய நிறுவனங்கள்/நபர்கள்) உள்ளடங்கிய அறிக்கையானது **PSC/ACC/R01/AUDIT/03/202** ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த

	எண்ணிக்கையையும் உள்ளடக்கி முன்வைக்கப்பட்டிருந்ததாக (காலப் பகுப்பாய்வு இன்றி) இங்கு குறிப்பிடப்பட்டது. அதன் காரணமாக குறித்த பிரிவின் மீளாய்வாண்டின் செயலாற்றுகை மட்டத்தை நிர்ணயிப்பதற்குப் போதிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் 2022 செயலாற்றுகை அறிக்கையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குழுவின் முன்னிலையில் வெளிப்பட்டது. முந்தைய ஆண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்படுவதால் மற்றும் மேன்முறையீடுகளுக்கான அறிக்கைகளைக் கோரும் நிறுவனங்களினால் அதற்குரிய பதிலை வழங்குவதற்குத் தாமதமாவதன் காரணமாக இவ்வாறான சிக்கல்கள் எழுவதாக பி.க.உ. தெரிவித்தார். நிறுவனங்களினால் முறைப்பாடுகளுக்குப் பதில் அளிக்கப்படாமை/பதில் வழங்குவதில் மந்தகதியான தன்மை தொடர்பில் ஜனாதிபதி செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.உ. தெரிவித்தார். நிறுவனங்களினால் முறைப்பாடுகளுக்கு உரிய காலத்திற்குள் பதில் வழங்கப்படாததன் காரணமாக ஏற்புடைய முறைப்பாட்டை மேற்கொள்ளும் திறத்தவர் பாதிப்படைவதை அவதானித்த குழு அது தொடர்பில் துரித நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவம் குறித்து குழு வலியுறுத்தியது. **பரிந்துரைகள்** அதற்கமைய தற்போது பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் தேவையான	**அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 01)**

	நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளை வழங்குவதற்குத் தாமதமாகியுள்ள நிறுவனங்களின் (அமைச்சுக்கள்/திணைக்களங்கள் முதலான ஏனைய நிறுவனங்கள்/நபர்கள்) பட்டியலொன்றைத் தாமதமாகியுள்ள கால எல்லைகளுடன் 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் கையளிக்குமாறு குழு பி.க.உத்தியோகத்தருக்குக் கட்டளையிட்டது. பகிரங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் ஏற்புடைய அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.	
03	<u>உள்ளகக் கணக்காய்வு</u> 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு பிரகாரம் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும் எனினும் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியானது 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாக இருப்பதை குழு அவதானித்தது. ஆணைக்குழுவிற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரைப் பெற்றுத் தருமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாக பி.க.உ. தெரிவித்தார்.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் அவரது சுகயீன நிலைமையின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுக்கொண்டதன் காரணமாக 2023.10.03 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாகவிருந்த குறித்த பதவிக்குத் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கமைய 2025.07.17 ஆம் திகதியிலிருந்து குறித்த பதவிக்குத் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
04	<u>பணிக்குழு தகவல்கள்</u> ஆணைக்குழுவின் 2023 டிசம்பர் 31 ஆம்	**சிரேஷ்ட மட்டம் -**

	திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 238 ஆக இருந்ததுடன், உண்மையான பதவியணி 219 ஆக இருப்பதால் சிரேஷ்ட மட்டத்தில் 7 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 4 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 2 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 6 வெற்றிடங்களுமாக 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், சேவையின் அவசியத்தைக் கவனத்திற் கொண்டு அத்தியாவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியைத் திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை குழு அவதானித்தது. தேசிய பொலிஸ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தம் செய்யப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளதாகவும் பி.க.உ. தெரிவித்தார்.	2023.12.31 ஆம் திகதியன்று 05 உதவி செயலாளர் பதவிகள், 01 உள்ளகக் கணக்காய்வாளர் பதவி மற்றும் 01 உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல்) பதவி என்றவாறு சிரேஷ்ட மட்டத்தில் 07 வெற்றிடங்கள் நிலவின. உதவி செயலாளர் பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் புதிய ஆட்சேர்ப்புக்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளதுடன், தற்போது 2 உதவி செயலாளர் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும் சட்ட நடவடிக்கையொன்றின் காரணமாக இலங்கை நிர்வாக சேவையின் பதவிக்கான நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையினால் குறித்த வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு தற்போது மேற்குறித்த 03 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல்) பதவிக்குத் தற்போது பதிற் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். **மூன்றாம் மட்டம் -** 2023.12.31 ஆம் திகதியன்று மூன்றாம் மட்டத்தின் 04 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அவற்றுள் புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடத்திற்குத் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரைப் பெற்றுத் தருமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டமொன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அலுவலகக் கட்டிடமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு

		ஏறத்தாழ 06 வருடங்கள் கடந்துள்ளதுடன், இதுவரை பாரிய அளவிலான புதுப்பித்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ஏற்படவில்லை என்பதால் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒருவரின் சேவைக்கான அவசியம் ஏற்படவில்லை. எனவே, குறித்த பதவிக்கு பதிற் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், தற்போது குறித்த பதவியின் முழுநேரச் சேவையின் தேவை இல்லை என்பதால் எதிர்காலத்தில் தேவைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்வேன். மொழிபெயர்ப்பாளர் பதவியில் நிலவிய வெற்றிடத்திற்கு மேலதிகமாக மற்றுமொரு உத்தியோகத்தர் பொ.நி.சு. 14/2022 இன் கீழ் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொண்டதன் காரணமாக மேலுமொரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதுடன், குறித்த 02 வெற்றிடங்கள் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். **இரண்டாம் மட்டம் -** தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் பதவியின் வெற்றிடம் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் 01 என்றவாறு இரண்டாம் மட்டத்தில் மொத்தம் 02 வெற்றிடங்கள் நிலவின. குறித்த வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன், அதற்கமைய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப

			உதவியாளர் பதவிக்கு புதிய ஆட்சேர்ப்புக்களின் கீழ் உத்தியோகத்தர் ஒருவர் இணைப்பு செய்யப்பட்டுள்ளார். அதற்கமைய குறித்த வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 மற்றும் ஏற்புடைய திருத்தங்களின் கீழ் உள்நாட்டு/வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளல், பதவி வெறிதாக்கல், அரச சேவையின் வேறு பதவிகளுக்காக சேவையிலிருந்து விடுவித்தல் போன்ற நிலைமைகள் காரணமாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியில் தற்போது 11 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வருடம் மே மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான புதிய ஆட்சேர்ப்புக்களின் போது குறித்த வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை இணைப்பு செய்யுமாறு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைத்து கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியான சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஏற்புடைய பணிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களே தமது கடமைகளுடன் சேர்த்து சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்கின்றனர். ஆரம்ப மட்டம் - சாரதி சேவையின் 03 வெற்றிடங்கள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையின் 03 வெற்றிடங்கள் என்றவாறு ஆரம்ப மட்டத்தில் 06 வெற்றிடங்கள் 2023.12.31 ஆம் திகதி ஏற்பட்டிருந்தன. அலுவலக உதவியாளர் பதவியில் நிலவிய 03 வெற்றிடங்களுக்கு மேலதிகமாக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில்

		முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்குப் பதவியுர்வு பெற்றமை, பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் கீழ் வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பதவி வெறிதாக்கல் போன்ற காரணங்களினால் ஏற்பட்ட 09 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக அலுவலக உதவியாளர் சேவையின் மொத்தம் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பிரதமர் செயலகத்தில் பேணப்பட்டு வரும் ஆட்சேர்ப்பு நடைமுறை மீளாய்விற்கான குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட அங்கீகாரத்தின் பேரில் பொருத்தமான புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். சாரதி சேவையில் 02 வெற்றிடங்கள் மாத்திரம் தற்போது காணப்படுவதுடன், குறித்த வெற்றிடங்களை நிரப்புமாறு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இரண்டு சாரதிகள் ஓய்வு பெற்றதன் காரணமாக குறித்த 02 வெற்றிடங்களும் ஏற்பட்டன என்பதையும் மேலும் குறிப்பிடுகின்றேன்.
05	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் Xi ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவுக்கு அமைய முழுநேர சேவை தேவைப்படும் பதவியொன்றிற்கு நிரந்தர நியமனம் மேற்கொள்ள வேண்டியுள்ளமை மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய மற்றும் 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த நடைமுறை விதிகளின் 139 ஆம் பிரிவுக்கு அமைய பதிற் கடமை அல்லது கடமை மேற்கொள்ளும் நியமனமொன்று உச்சபட்சம் ஒரு வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த	நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் நிலவிய வெற்றிடத்திற்கு முகாமைத்துவ சேவையின் அதியுயர் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் 2023.05.24 ஆம் திகதியிலிருந்து நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 56(4) ஆம் உறுப்புரைக்கு அமைய பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு அதிகாரம் உண்டு. அதற்கமைய விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 2023.08.02 ஆம் திகதியிலிருந்து புதிய செயலாளர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

	போதிலும் 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு அமைய குறித்த விதிமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்துள்ளமை. அதற்கமைய 2019 மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாகவிருந்த ஆணைக்குழுவின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 மார்ச் 31 ஆம் திகதி வரை அதாவது 4 வருடங்களாக பதிற்கடமை அடிப்படையிலும், 2021 டிசம்பர் 09 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாகவிருந்த செயலாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதிற்கடமை அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.	
06	<u>2016 ஜுலை 08 ஆம் திகதி நடைபெற்ற முன் கணக்குக் குழு கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்.</u> <u>கட்டளை இலக்கம் 07</u> 2010, 2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களுக்கான செயல் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பதுடன், 2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு செயலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், வருடாந்த செயல் திட்டத்திற்கு அமைய முன்னேற்ற மீளாய்வு மற்றும் முன்னேற்ற அறிக்கையிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கு அமைய வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும் செயல் திட்டத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் முன்னேற்ற அறிக்கைகள்	2025 ஆம் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்திற்கு அமைய 2025.12.31 ஆம் திகதி வரை முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

	தயாரிக்கப்படவில்லை என்பதை குழு அவதானித்தது. செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று தயாரிப்பதாக பி.க.உ. தெரிவித்தார். எவ்வாறாயினும் அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைத் தீர்ப்பதன் முன்னேற்றமானது ஏற்புடைய நிறுவனங்கள் அதற்கு எந்தளவிற்கு பதிலளிக்கின்றன என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால், உறுதியாகக் குறிப்பிட முடியாது எனவும் செயல் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கையை அண்ணளவாக சதவீதமாகக் குறிப்பிடுவதாகவும் மேலும் தெரிவித்தார்.	
07	<u>பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்ட பதவிகள்</u> பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்ட பதவிகளுக்கு அரச நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களை மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யாது அதற்கு ஏனைய நாடளாவிய சேவைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும் என குழு பரிந்துரைத்தது. அதன் போது அரச சேவையின் பல்வேறு சேவைகள்/துறைகளின் உத்தியோகத்தர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டமைப்பை தயாரிப்பதன் மூலம் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குப் பல்வேறு துறைகளின் உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்படும் நியமனம் வழங்கல் மற்றும் பதவியுயர்த்தல் தொடர்பிலான பல்வேறு சிக்கல்களுக்கு நடைமுறை	PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் ஏற்புடைய அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 02)

	ரீதியாக வெற்றிகரமான தீர்வுகளை வழங்க முடியும் என்பதையும் குழு சுட்டிக் காட்டியது. இதன் பொருட்டு பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைமுறையிலுள்ள நிறுவனக் கட்டமைப்பை மாற்றியமைத்தல் வேண்டும் எனவும் குழு மேலும் முன்மொழிந்தது. **பரிந்துரைகள்** கடந்த 5 வருடங்களில் அரச சேவையின் அனைத்து சேவைகளிடமிருந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்து/வகைப்படுத்தி அது தொடர்பான புள்ளிவிபரங்களுடனான அறிக்கையொன்றை 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.உ. க்கு பரிந்துரைத்தது. **பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்ப்புக்கள்/தீர்மானங்களை பெரிதும் நியாயமானதாக்குவதற்கு மற்றும் பயனுடையதாக்குவதற்கு நாடளாவிய சேவைகள் மற்றும் ஏனைய ஏற்புடைய சேவைகளிலிருந்து உத்தியோகத்தர் பிரதிநிதித்துவமொன்றை பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பதவியணியில் (Cadre) உள்ளடக்குமாறும், அவ்வாறு செய்ய முடியாவிடின் மதியுரை மட்டத்திலேனும் அனைத்து சேவைகளினதும் பிரதிநிதித்துவமொன்றை பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதற்குத் தேவையான பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு	**PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 03)**

	மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி அதற்குரிய முன்மொழிவுகள் தொடர்பில் 2024.01.31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறும் குழு பி.க.உ.. க்கு பரிந்துரைத்தது. **பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த விடயங்கள் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பதில் வழங்கப்பட்டுள்ளது.**	
08	2017 ஜுலை 25 ஆம் திகதிய மற்றும் 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் ஆணைக்குழுவானது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை, தேசிய அபிவிருத்தி உத்திகளுடன் இணைத்து ஒழுங்கமைத்தல் வேண்டும் எனினும் 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கைகளில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் ஏற்புடையதல்ல எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பொருட்டு வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளுக்குரிய பதிலாக ஆணைக்குழுவிற்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் ஏற்புடையதல்ல எனப் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்புடைய சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 07 வருடங்கள் கடந்ததன் பின்னர் 05 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2024 ஆம்	குழுவின் அறிவித்தலுக்கு அமைய 2024 ஆம் ஆண்டிலிருந்து நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அதன் முன்னேற்றம் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

	ஆண்டில் இனங்காணப்பட்டிருந்தது என்பதும், 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்குத் தற்போது நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும் எனினும், அத்தகையதொரு திட்டம் மற்றும் ஏற்பாடு காணப்படுகிறதா என்பதை கணக்காய்வினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது என்பதும் குழு முன்னிலையில் வெளிப்பட்டது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல்கள் மற்றும் பொதுமக்கள் சேவைகள் குறித்து செயற்படுவதற்கு பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் அதன் பொருட்டு நிறுவனத்தினுள் பிரிவொன்றை தாபித்து குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மீளாய்வு செய்து நிறுவனத்திற்கு ஏற்புடைய நோக்கங்களை இனங்கண்டு அதற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனவும் குழு வலியுறுத்தியது. **பரிந்துரைகள்** i. சேவைப் பிரமாணக்குறிப்புக்களை அங்கீகரித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு வழிகாட்டிகளைத் தயாரிக்கையில் காலத்திற்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தல்களை முன்கூட்டியே கணித்து அதற்கமைய குறித்த நடைமுறைகளை தயாரிப்பதற்கு மற்றும் அது குறித்த மேற்பார்வையொன்றை செய்வதற்கு பகிரங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என இதன் போது குழு	i 1. விஞ்ஞான, கல்வி மற்றும் தொழிநுட்ப சேவைகளுக்கு நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு வழிகளை அறிமுகப்படுத்துவதன் தேவைப்பாட்டை இனங்கண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2. இலங்கை விஞ்ஞான சேவையின் தெரிவு முறையின் செல்லுபடித்தன்மையை

	பரிந்துரைத்தது.	உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இனங் காணப்பட்டுள்ளன. 3. விஞ்ஞான, கல்வி மற்றும் தொழிநுட்ப சேவைகளில் தற்போது நடைமுறையிலுள்ள குழுவாக ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பதிலாக பதவி அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான இயலுமை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. 4. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் முறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. 5. இலங்கை வெளிநாட்டு சேவையின் ஆட்சேர்ப்பு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பில் வெளிநாட்டு அமைச்சின் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. 6. நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் குறித்த சேவைகளின் பதவியுயர்வுகளின் போது தேவையான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை மீளாய்வு செய்வதற்கு நிபுணர் குழுவொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
	ii. ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்தும் கடந்த 5 வருடங்களில் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்து, அரச சேவையில்	**PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 04)**

	இனங்காணப்பட்ட முன்னோடியான பிரச்சினைகள் குறித்த அறிக்கையொன்றை 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் கையளிக்குமாறு குழுவினால் பி.க.உ. க்குப் பரிந்துரைக்கப்பட்டது. **பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.** iii. ஒவ்வொரு நிறுவனங்களினதும் ஆட்சேர்ப்புக்களை இடைநிறுத்தி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கள் (Stay Orders) தொடர்பான அறிக்கையொன்றை 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் கையளிக்குமாறு குழுவினால் பி.க.உ. க்குப் பரிந்துரைக்கப்பட்டது. **பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**	**PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 05)**
09	**பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள்.** 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய மற்றும் 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறைவிதிகளின் 237 ஆம் பிரிவு பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட	2022 டிசம்பர் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க நடைமுறை விதிகளுக்கு அமைய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்கு ஏற்புடைய மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானங்களை வழங்குவதற்கான கால எல்லை குறித்துரைக்கப்படவில்லை.

	மேன்முறையீடொன்று ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்று, இடமாற்றம் தொடர்பில் 15 நாட்கள் மற்றும் பதவியுயர்வு தொடர்பில் 45 நாட்களுக்குள் ஆணைக்குழு தீர்மானமொன்றை எடுத்தல் வேண்டும். எனினும், பரிசீலிக்கப்பட்ட 21 கோவைகளுள் 07 இடமாற்ற மேன்முறையீடுகளுக்கு தீர்மானங்களை வழங்குவதற்கு 45 தொடக்கம் 1,504 நாட்கள் வரையானதொரு காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன், பதவியுயர்வு மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்று 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று எடுக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அதற்கான தீர்மானம் வழங்கப்பட்டிருக்கவில்லை.	எனினும் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பில் முறைப்படி அறிக்கைகள் கோரப்பட்டு, உள்ளக நிலையியற் கட்டளைகளுக்கு அமைய நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பி வைக்கப்படுவதுடன், அறிக்கைகள் கிடைக்கப்பெற்று குறுகிய காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவினால் தீர்மானங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
10	<u>ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.</u> ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் எத்தனை பேர் என்பது குறித்து ஆணைக்குழுவின் தரவு முறைமை மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதி இருக்கவில்லை. விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கோவைகளுள் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு அதிக காலம் எடுப்பதன் காரணமாக குற்றஞ்சாட்ட சில உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு சிறப்புரிமைகள் கிடைத்தலானது ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிவுற்று ஒழுக்காற்று கட்டளைகளை வழங்கும் வரை பல வருடங்கள் தாமதமாகிய சந்தர்ப்பங்களையும் குழு அவதானித்தது.	

	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த ஒழுக்காற்று விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் கையளிக்கப்படாமைக்கான காரணம் அத்தகைய சந்தர்ப்பங்கள் தற்போது வரை ஏற்படவில்லை என்பதேயாகும் எனவும் பி.க.உ. தெரிவித்தார். உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்காற்று சிக்கல்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்கையில் ஆணைக்குழுவினால் வேறு அரச நிறுவனங்களிடமிருந்து அவ்வப்போது தகவல்கள் கோரப்படுவதுடன், அவ்வாறு கோரப்படும் தகவல்களை ஏற்புடைய நிறுவனங்களினால் வழங்குவதற்குத் தாமதமாகும் சந்தர்ப்பங்களில் நினைவூட்டற் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததையும் எனினும் குறித்த நினைவூட்டல்கள் அனைத்துக் கோவைகளுக்கும் பொதுவான குறித்துரைக்கப்பட்ட கால எல்லைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதையும் குழு அவதானித்தது. ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அதன் ஒவ்வொரு படிமுறைக்கும் எடுக்கும் கால எல்லைகள் ஒன்றிற்கொன்று வேறுபடுவதால் இவ்வாறு நினைவூட்டற் கடிதங்களை அனுப்புவதில் மாறுபட்ட கால எல்லைகள் காணப்படுவதாக பி.க.உ. தெரிவித்தார். நினைவூட்டற் கடிதங்களை அனுப்புகையில் அனைத்துக் கோவைகளுக்கும் பொதுவான குறித்துரைக்கப்பட்ட கால எல்லைகளுக்கு அமைய அனுப்புவதற்குத் தேவையான	பகிரங்க சேவை ஆணைக்குழு மற்றும் அதிகாரம் கையளிக்கப்பட்ட நியமன/ஒழுக்காற்று அதிகாரிகள் ஆகிய இரு திறத்தவருக்காகவுமே பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

	வழிகாட்டல்களை பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறைவிதிகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென குழு வலியுறுத்தியது.	நினைவூட்டல்களை அனுப்புதலானது பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு மாத்திரமே ஏற்புடையதொரு நடவடிக்கையாகும். எனவே, பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் நினைவூட்டல்களை அனுப்புவது தொடர்பில் பின்பற்ற வேண்டிய முறை குறித்து நிலையியற் கட்டளைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
11	<u>இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு கணனிமயப்படுத்தப்பட்ட ஆவண முகாமைத்துவ முறைமையைப் பயன்படுத்தல்.</u> ஆணைக்குழுவினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த முறைமை மூலம் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் கடிதமொன்றின் / நடைமுறை நிலைமை (Present status) அதாவது அது எந்த பிரிவில் உள்ளது என்பதைப் பரிசீலிக்கக் கூடியதாக இருந்த போதிலும் ஒரே கோவைக்கு அமைவாக பல சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு இந்த முறைமை மூலம் வெவ்வேறான இலக்கங்கள் வழங்கப்படுவதால் குறித்த கோவைகளின் முன்னேற்றத்தை இந்த முறைமை மூலம் பரிசீலிக்க முடியாது என்பது குழு முன்னிலையில் வெளிப்பட்டது. பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு நாளாந்தம் கிடைக்கப்பெறும் 200 க்கும் அண்மித்த கடிதங்களை முகாமைத்துவம் செய்வதற்கு 2012 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கணனிமயப்படுத்தப்பட்ட முகாமைத்துவ முறைமை மூலம் ஏற்புடைய கடிதங்கள் அந்தந்த தினங்களில் எந்தப் பிரிவில் உள்ளன என்பதைக் கண்டறிய முடியும் என பி.க.உ. தெரிவித்தார். எவ்வாறாயினும் இந்தக்	ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறும் கடிதங்கள் தொடர்பில் அடிப்படை விபரங்களாகக் குறித்த கடிதம் கிடைத்த திகதி மற்றும் நடைமுறை நிலைமையை அறிந்து கொள்வதே இந்தத் தகவல் முறைமையை நிர்மாணிப்பதன் அடிப்படை நோக்கமாகும். தற்போது ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற கடிதம் தொடர்பில் உசாவுகையில் மிகக் குறுகிய நேரத்தில் அதன் நடைமுறை நிலைமையை இந்தத் தகவல் முறைமை மூலம் இலகுவில் கண்டறிய முடியும். அதே போன்று காலப் பகுப்பாய்வு போன்ற தகவல்களை இந்தத் தகவல் முறைமை மூலம் பெற்றுக் கொள்வது சிரமம் என்பதால் புதிய தகவல் முறைமையொன்றை நிர்மாணிப்பதற்கு தற்போது ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த தகவல் முறைமை மூலம் தாங்கள் சுட்டிக்காட்டும் தேவைப்பாடுகளை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

	கணனிமயப்படுத்தப்பட்ட ஆவண முகாமைத்துவ தகவல் முறைமையை மேலும் விருத்தி செய்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு தயாரிக்குமாறு குழு இதன்போது முன்மொழிந்தது.	
12	<u>2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று கணக்காய்விற்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கோவைகளின் காலப் பகுப்பாய்வு</u> 2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று கணக்காய்விற்கு ஒவ்வொரு பிரிவிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ள கோவைகளின் காலப் பகுப்பாய்வு மற்றும் கணக்காய்விற்கு 2024 ஜனவரி 12 ஆம் திகதி வழங்கப்பட்ட ஆணைக்குழுவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவைகள் ஆவணத்திற்கு அமைய காணப்பட்ட கோவைகள் ஆரம்பிக்கப்பட்ட வருடங்களைப் பரிசீலிக்கையில் மேற்குறித்தவாறு வழங்கப்பட்ட காலப் பகுப்பாய்வு தவறானது என்பதை குழு அவதானித்தது. மேலும், 2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மேன்முறையீட்டுப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவில் காணப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவைகளின் எண்ணிக்கை முறையே 292, 180 மற்றும் 168 ஆகக் காணப்பட்டதுடன், குறித்த அனைத்துக் கோவைகளும் ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப் பகுதிக்குரியவை என்பதையும், 2024 ஜனவரி 12 ஆம் திகதி வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மேன்முறையீட்டுப் பிரிவு, ஒழுக்காற்றுப்	<u>மேன்முறையீட்டுப் பிரிவு</u> மேன்முறையீட்டுப் பிரிவின் கோவைகள் ஒவ்வொரு விடயத்திற்கு அமைய பேணப்பட்டு வருவதுடன், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவைகள் தொடர்பில் பரீட்சிக்கையில் அவற்றுள் காலப் பகுப்பாய்வு 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று எடுக்கும் கோவைகளும் காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகிறது. ஏற்புடைய அமைச்சுக்கள்/திணைக்களங்களிடமிருந்து கோரப்பட்ட அறிக்கைகள் கிடைக்கப்பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமை புலனாவதுடன், பிரிவினால் தொடர்ச்சியாக நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. <u>ஒழுக்காற்றுப் பிரிவு</u> உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கையில் மேற்கொள்ளப்படும் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பில் தங்களது தயவான கவனத்திற்கு முன்வைக்கிறேன். தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:12 ஆம் பிரிவு பிரகாரம் ஆரம்பப் புலனாய்வை மேற்கொண்டதன் பின்னர், ஆரம்பப் புலனாய்வு உத்தியோகத்தரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடனான ஆரம்பப் புலனாய்வு அறிக்கையுடன் ஏற்புடைய திறத்தவரிடமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் மற்றும்

	பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவுகளில் காணப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவைகள் முறையே 247, 131 மற்றும் 178 ஆகக் காணப்பட்டன என்பதையும் காலப் பகுப்பாய்வுக்கு அமைய குறித்த கோவைகள் 1 வருடத்திற்குக் குறைந்த காலப் பகுதியிலிருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதி வரை காணப்படுகின்றன என்பதையும் குழு அவதானித்தது. மேன்முறையீட்டுப் பிரிவினதும் ஒழுக்காற்றுப் பிரிவினதும் கோவைகள் ஒவ்வொரு விடயத்திற்கு அமைய பேணப்பட்டு வருகின்றமையினால் காலப் பகுப்பாய்வானது 4 வருடங்களுக்கும் மேலாக இருக்கலாம் என்ற போதிலும் பதவியுயர்வுப் பிரிவில் நிறுவன ரீதியாகக் கோவைகள் பிரிக்கப்பட்டுள்ளமையினால் மேற்குறித்த காலப் பகுப்பாய்வுகள் தவறானவை என பி.க.உ. தெரிவித்தார்.	குறித்த ஆரம்பப் புலனாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய சந்தேகத்திற்கு ஆளான உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமளவிற்கு போதுமான குற்றச்சாட்டுக்கள் வெளிப்படுமாயின் தாபன விதிக்கோவையின் 5 மற்றும் 6 ஆம் பின்னிணைப்புக்கள் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திர வரைவு, குறித்த ஆரம்பப் புலனாய்வின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் ஏற்புடைய திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சு செயலாளரின் மற்றும் நிர்வாக அதிகாரியின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் ஒழுக்காற்று அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறித்த விடயங்கள் குறைபாடுகளுடன் அறிக்கையிடப்படுகின்றன. அதன் போது மீண்டும் குறித்த குறைபாடுகளை பெற்றுக்கொள்ள நேரிடுவதுடன், சில சந்தர்ப்பங்களில் குறைபாடுகளைப் பூர்த்தி செய்து அனுப்புவதன் பொருட்டு ஏற்புடைய அனைத்து ஆவணங்களையும் மீண்டும் அனுப்பி வைக்க நேரிடுகிறது. அவ்வாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறைபாடுகளை வெவ்வேறாகக் குறிப்பிட்டு அனுப்பிய போதிலும் குறித்த குறைபாடுகளைப் பூர்த்தி செய்து அனுப்புகையிலும் சரியாக அனுப்பி வைக்காததன் காரணமாக மீண்டும் மீண்டும் கோர வேண்டியுள்ளது. எனவே, பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் ஆரம்பப் புலனாய்வு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் சரிபார்ப்புப் பட்டியலொன்றைத் தயாரித்து எனது PSC/DIS/01/02/2022-02 ஆம் இலக்க மற்றும் 2022.04.25 ஆம் திகதிய

		கடிதம் மூலம், அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய தகவல்கள் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும், குற்றப்பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த குற்றப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தருக்கு அதற்குரிய பதில்களை வழங்குவதற்கு 01 மாத காலம் வழங்கப்படுகிறது. அதன் போது அவர் குற்றப்பத்திரத்திற்கு பதில் அளிப்பதன் பொருட்டு ஏற்புடைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேலதிக கால அவகாசம் கோரும் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு முன்வைக்கப்படும் விடயங்களின் அடிப்படையில் பதில் வழங்குவதற்கான கால எல்லைகள் நீடிக்கப்படும். மேலும், தாபன விதிக்கோவையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தரினால் முன்வைக்கப்படும் பதில்களுக்கு ஏற்புடைய நிறுவனத் தலைவர்கள் அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் மற்றும் ஏனைய தகவல்களையும் முன்வைத்தல் வேண்டும். அதன் பின்னர் உத்தியோகத்தரின் பதிலையும் ஆழமாக பகுப்பாய்வு செய்ததன் பின்னர் அது தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை வழங்குதல் வேண்டும். அதற்கமைய குறித்த விடயங்கள் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் மாத்திரம் காணப்படும் செயற்பாடாகக் கருத முடியாது. அதே போன்று முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 05 திறத்தவர்கள், அதாவது, விசாரணை உத்தியோகத்தர், அரச வழக்குத் தொடுநர், எதிர்க்காப்பு

அலுவலர், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மற்றும் சாட்சியாளர்கள் தொடர்புபடல் வேண்டும் என்பதுடன், விசாரணை நடைபெறும் இடத்தின் நிறுவனத் தலைவர் அதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தலும் வேண்டும். அதே போன்று குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரைப் போன்றே திணைக்களத் தலைவர்களினாலும் அரச வழக்குத் தொடுநர் மற்றும் எதிர்க்காப்பு அலுவலராக செயற்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் திருத்தங்கள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அதே போன்று தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய குற்றப்பத்திர திருத்தத்தை மேற்கொள்வதற்கு கோரும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், அதன் போது குற்றப்பத்திரங்களைத் திருத்தம் செய்வதாயின் அதற்கான பதிலை வழங்குவதற்கும் உத்தியோகத்தருக்கு மீண்டும் கால அவகாசம் வழங்குதல் வேண்டும். அவ்வாறே குறித்த பதில்களுக்கும் நிறுவனத் தலைவர்களிடமிருந்து அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும், குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவர்கள் விடுதலை பெறும் வரை ஏற்புடைய விசாரணை நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்த நேரிடுகிறது. அதே போன்று குறித்த பணிகளில் தொடர்புபடும் உத்தியோகத்தர்களுக்குத் தமது நிரந்தரப் பதவியின் கடமைகளுக்கு முன்னுரிமை அளிக்க நேரிடுவதன் மூலமும் அதில் கலந்து கொள்வதில் தாமதங்கள் ஏற்படுதலும் அதற்கமைய ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளத் தாமதமாகின்றமையும் அவதானிக்கப்படுகிறது. குற்றப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சாட்சியாளர்களின்

எண்ணிக்கை, ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் குற்றத்தில் காணப்படும் சிக்கல் மிகுந்த தன்மை போன்ற காரணங்களினாலும் ஏற்புடைய குற்றச்சாட்டுக்களை நிருபிப்பதற்கு நீண்ட காலத்திற்கு அமர்வுகளை நடாத்த நேரிடுகின்றமையும் மேலும் அவதானிக்கப்படுகிறது.

அதற்கமைய 2024 ஜனவரி 12 ஆம் திகதி வழங்கிய தகவல்களில் உள்ளடங்கியிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த 131 கோவைகளுள் தற்போது 92 கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவைகளின் எண்ணிக்கை 39 ஆகும் என்பதைத் தயவுடன் அறியத் தருகிறேன்.

<u>பதவியுயர்வுப் பிரிவு</u>

பதவியுயர்வுப் பிரிவுக்கு ஏற்புடைய கோவைகளானது ஒவ்வொரு விடயத்திற்கு அமைய பேணப்பட்டு வரும் கோவைகள் அல்ல என்பதுடன், அது நிறுவனங்கள்/பதவிகளாக வேறாக்கப்பட்டுள்ளன. எனவே, கோவை ஆரம்பிக்கப்பட்ட வருடம் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கடிதத்தின் வருடம் வேறுபடலாம். அதாவது, ஒரு கோவையினுள் ஏற்புடைய நிறுவனத்தின்/பதவியின் பல வருடங்களுக்கு ஏற்புடைய விடயங்கள் காணப்படலாம்.

உ-ம் :

1. PSC/PRO/6/1046/2022

*கோவை ஆரம்பிக்கப்பட்ட திகதி - 2022.05.04

*2024.01.12 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்ட கடிதத்தின் திகதி - 2023.12.15

*குறித்த கடிதத்தின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட திகதி - 2024.01.29

		2. PSC/PRO/6/1127/2023 * கோவை ஆரம்பிக்கப்பட்ட திகதி - 2023.09.28 *2024.01.12 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்ட கடிதத்தின் திகதி - 2023.12.19 * குறித்த கடிதத்தின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட திகதி - 2024.01.31

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு

W.H.M.M.C.K. Dayaratne
Secretary
Public Service Commission
No. 1200/9, Rajamalwatta Road
Battaramulla